## நம்மாழ்வார் அருளிச் செய்த
## திருவாய்மொழி
## எட்டாம் பத்து
## ஸத்யகாமனான எம்பெருமான் திறத்தில் நன்றி அறிவால் கலங்கிக் கைம்மாறாக ஸமர்ப்பிக்கப் பெற்ற தம் ஆத்ம ஸ்வரூபத்தின் தன்மை உணர்தல்

### முதல் திருவாய்மொழி - தேவிமாராவார்
### எம்பெருமான் தமது நினைவைத் தலைக்கட்டாமையால், ஆழ்வார் அவனது ஆஶ்ரித பாரதந்த்ரியம், யாவையும் தானாம் நிலைமை இவைகளைச் சங்கித்துத் தெளிதல்

** தேவிமார் ஆவார் திருமகள் பூமி *
ஏவ மற்று அமரர் ஆட்செய்வார் *
மேவிய உலகம் மூன்று அவை ஆட்சி *
வேன்டு வேண்டு உருவம் நின் உருவம் **
பாவியேன் தன்னை அடுகின்ற கமலக்
கண்ணதோர் * பவள வாய் மணியே! *
ஆவியே! அமுதே! அலை கடல் கடைந்த
அப்பனே! * காணும் ஆறு அருளாய் 1

காணும் ஆறு அருளாய் என்று என்றே கலங்கிக் *
கண்ண நீர் அலமர * வினையேன்
பேணும் ஆறு எல்லாம் பேணி * நின் பெயரே
பிதற்றும் ஆறு அருள் எனக்கு அந்தோ! **
காணும் ஆறு அருளாய் காகுத்தா! கண்ணா! *
தொண்டனேன் கற்பகக் கனியே! *
பேணுவார் அமுதே! பெரிய தண் புனல் சூழ் *
பெரு நிலம் எடுத்த பேராளா! 2

எடுத்த பேராளன் நந்தகோபன் தன் *
இன் உயிர்ச் சிறுவனே! * அசோதைக்கு
அடுத்த பேர் இன்பக் குல இளங்களிறே! *
அடியனேன் பெரிய அம்மானே! **
கடுத்த போர் அவுணன் உடல் இரு பிளவாக் *
கை உகிர் ஆண்ட எங்கடலே! *
அடுத்ததோர் உருவாய் இன்று நீ வாராய் *
எங்ஙனம் தேறுவர் உமரே? 3

உமர் உகந்து உகந்த உருவம் நின் உருவம் ஆகி *
உன் தனக்கு அன்பர் ஆனார்
அவர் * உகந்து அமர்ந்த செய்கை உன் மாயை *
அறிவொன்றும் சங்கிப்பன் வினையேன் **
அமர் அது பண்ணி அகல் இடம் புடை சூழ் *
அடு படை அவித்த அம்மானே! *
அமரர் தம் அமுதே! அசுரர்கள் நஞ்சே! *
என்னுடை ஆருயிரேயோ! 4

ஆருயிரேயோ! அகல் இடம் முழுதும் *
படைத்து இடந்து உண்டு உமிழ்ந்து அளந்த *
பேருயிரேயோ! பெரிய நீர் படைத்து *
அங்கு உறைந்து அது கடைந்து அடைத்து உடைத்த **
சீரியரேயோ! மனிசர்க்குத் தேவர் போலத் *
தேவர்க்கும் தேவாவோ! *
ஓர் உயிரேயோ? உலகங்கட்கு எல்லாம் *
உன்னை நான் எங்கு வந்து உறுகோ? 5

எங்கு வந்து உறுகோ? என்னை ஆள்வானே! *
ஏழ் உலகங்களும் நீயே *
அங்கு அவர்க்கு அமைத்த தெய்வமும் நீயே *
அவற்றவை கருமமும் நீயே **
பொங்கிய புறம் பால் பொருள் உளவேலும் *
அவையுமோ நீ இன்னே ஆனால் *
மங்கிய அருவாம் நேர்ப்பமும் நீயே *
வான் புலன் இறந்ததும் நீயே 6

இறந்ததும் நீயே எதிர்ந்ததும் நீயே *
நிகழ்வதோ நீ இன்னே ஆனால் *
சிறந்த நின் தன்மை அது இது உது என்று *
அறிவொன்றும் சங்கிப்பன் வினையேன் **
கறந்த பால் நெய்யே! நெய்யின் இன் சுவையே! *
கடலினுள் அமுதமே! * அமுதில்
பிறந்த இன் சுவையே! சுவை அது பயனே! *
பின்னை தோள் மணந்த பேர் ஆயா! 7

மணந்த பேர் ஆயா! மாயத்தால் முழுதும் *
வல்வினையேனை ஈர்கின்ற *
குணங்களை உடையாய்! அசுரர் வன்கையர்
கூற்றமே! * கொடிய புள் உயர்த்தாய்! **
பணங்கள் ஆயிரமும் உடைய பைந்நாகப்
பள்ளியாய்! * பாற்கடல் சேர்ப்பா! *
வணங்கும் ஆறு அறியேன் மனமும் வாசகமும் *
செய்கையும் யானும் நீ தானே 8

யானும் நீ தானே ஆவதோ மெய்யே *
அரு நரகு அவையும் நீ ஆனால் *
வான் உயர் இன்பம் எய்தில் என்? * மற்றை
நரகமே எய்தில் என்? எனிலும் **
யானும் நீ தானாய்த் தெளிதொறும் நன்றும்
அஞ்சுவன் * நரகம் நான் அடைதல் *
வான் உயர் இன்பம் மன்னி வீற்றிருந்தாய்! *
அருளு நின் தாள்களை எனக்கே 9

தாள்களை எனக்கே தலைத் தலைச் சிறப்பத்
தந்த * பேர் உதவிக் கைம்மாறா *
தோள்களை ஆரத் தழுவி * என் உயிரை
அற விலை செய்தனன் சோதீ! **
தோள்கள் ஆயிரத்தாய்! முடிகள் ஆயிரத்தாய்! *
துணை மலர்க் கண்கள் ஆயிரத்தாய்! *
தாள்கள் ஆயிரத்தாய்! பேர்கள் ஆயிரத்தாய்! *
தமியனேன் பெரிய அப்பனே! 10

** பெரிய அப்பனைப் பிரமன் அப்பனை *
உருத்திரன் அப்பனை * முனிவர்க்கு
உரிய அப்பனை அமரர் அப்பனை *
உலகுக்கு ஓர் தனி அப்பன் தன்னை **
பெரிய வண்குருகூர் வண்சடகோபன் *
பேணின ஆயிரத்துள்ளும் *
உரிய சொல் மாலை இவையும் பத்து இவற்றால் *
உய்யலாம் தொண்டீர்! நங்கட்கே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---